**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள்** : 03.07.2026

**வழக்கு எண்** : **HMOP.4/2025**

**சாட்சி பெயர்** : **திரு.சக்திகணேஷ் / PW.1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் எனது பெற்றோர் ஏற்பாட்டின்பேரில் நடைபெற்றது. என் பெற்றோர்கள் எதிர்மனுதாரர் பெற்றோரிடம் பெண் கேட்டார்கள் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் எதிர்மனுதாரர் பெற்றோரிடம் பெண் கேட்டார்கள் என்றும், வழக்கிற்காக அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை நான் பெண் கேட்ட Jio சிம் விற்பனையாளராக வேலை பார்த்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்தேன் என்ாறல் சரியல்ல. அதனால்தான் எதிர்மனுதாரர் பெற்றோர் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாரர்க்கும் 23.02.2023ம் தேதி திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சரிதான். அப்பொழுது எனது பெற்றோர்கள் எதிர்மனுதாரர் பெற்றோரிடம் 15பவுன் நகையும், ஒரு லட்சமும் கேட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் 23.03.2023ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். திருமணத்தின்போது எதிர்மனுதாரர்கள் பெற்றோர்கள் எதிர்மனுதாரருகக்கு 10 பவுன் நகையும், எனக்கும் 2 பவுன் செயிலும், மேலும் ரொக்கம் ரூ.75,000/- மற்றும் கட்டில், மெத்தை ,பீரோ, சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு நானும், எதிர்மனுதாரரும் எனது பெற்றோர் வீட்டில் கூட்டுகுடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணமாகி எனது வீட்டில் கூட்டுகுடும்பமாக வாழ்ந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் பாதி எங்கள் வீட்டிலும், பாதி அவர்கள் வீட்டிலும் வாழ்ந்தோம். எனக்கு இரண்டு சகோதரிகள் என்றால் சரிதான், அதில் ஒருவர் இறந்துபோனார், இறந்துபோன சகோதரிக்கு 3 குழந்தைகள் என்றால் சரிதான், அந்த குழந்தைகளை நானும், எனது பெற்றோரும் பராமரித்து வருகிறோம் என்றால் எனது அம்மாதான் பார்த்து வருகிறார். நானும், எனது அம்மாவும்தான் பராமரித்து வருகிறோம் என்றும், திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் அந்த குழந்தைகளை நன்கு பராமரித்து

வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பிறகு நல்ல முறையில் பராமரித்து வீட்டு வேலை செய்து வந்தார் என்றும், என் அம்மாதான் எதிர்மனுதாரரை குற்றம்,குறை கூறி வந்தார் என்றால் சரியல்ல. என் அம்மா எதிர்மனுதாரரை பற்றி அடிக்கடி என்னிடம் குறை சொல்லி எனக்கும், எதிர்மனுதாரருககும் சண்டை மூட்டி வைத்தார் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனக்கு 21 வயது முடிந்திருந்தது, எதிர்மனுதாரர் என்னைவிட 3 வயது மூத்தவர். எதிர்மனுதாரர் என்னைவிட 3வயது மூத்தவர் என்றும், கட்டையாக, கருப்பாக இருப்பதாகவும் சொல்லி அவரை அவமான படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை நான் உருவ கேலி செய்து 05.05.2023ம் தேதி வீட்டை விட்டு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல, அன்றையதினம்தான் அவர் குழந்தை உண்டாகி இருப்பதாக கார்டு காண்பித்து, குழந்தைக்கும், எனக்கும் சம்மந்தம் இல்லை என எதிர்மனுதாரர் சொல்லிவிட்டு அவரது அப்பா,அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். எதிர்மனுதாரர் 2 மாதம் குழந்தை உண்டாகி இருப்பதாக என்னிடம் சொன்னபோது நான் என்னால் குழந்தைபேறு பார்க்க முடியாது என்று சொல்லி சண்டை போட்டு அவரை அனுப்பிவி'டேன் என்றால் சரியல்ல, அவர் 4 மாதம் கர்ப்பமாக இருப்பதாக சொன்னார், திருமணம் ஆகி 3 மாதம் ஆகியுள்ளது என கேட்டதற்கு உனக்கும், குழந்தைக்கும் சம்மந்தம் இல்லை என சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். எதிர்மனுதாரருடைய பெற்றோர்கள் சமாதான பேச்சுவார்த்தைக்கு வந்தபோது நான் அவர்களை வீட்டிற்குள் அனுமதிக்காமல் அவர்களை பார்க்க வரமாட்டேன் என சொல்லி வீட்டிற்குள்ளே இருந்துவிட்டேன் என்றால் அவர்கள் வீட்டில்இருந்து யாரும் வரவில்லை. 28.05.2023ம் தேதியில் எதிர்மனுதாரர் பெற்றோர்களும், ஊர் பெரியவர்களும் எங்கள் வீட்டிற்கு பேச்சுவார்த்தை நடத்த வந்தபொழுது அவர்களிடம் நான் மேற்கொண்டு 12 பவுன் நகை போட்டால் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வேன் என சொல்லி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் 29.05.2023ம் தேதி எதிர்மனுதாரர் திருச்செந்துார் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என்னுடன் சேர்ந்துவாழ வேண்டும் என கேட்டு மனு கொடுத்தார் என்றால் சரியல்ல, மாதம், மாதம் ஜீவனாம்சம் வேண்டும் என்றும், என்னுடம் சேர்ந்து வாழ மாட்டேன் என்று சொன்னார். காவ்லநிலையத்தில் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லிவிட்டு வெளியில் வந்து மேலும் 12 பவுன் கொடுத்தால் சேர்ந்துவாழ்வேன் என சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. எனவே

எதிர்மனுதாரர் சாத்தான்குளம் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் 06.10.2023ம் தேதி மனு கொடுத்தார் என்றால் சரியல்ல, அது DVC 8/23. அதற்கான அழைப்பாணை பெற்று நான் ஆஜரானேன் என்றால் சரிதான். நான் DVC 8/23 வழக்கில் ஆஜரானபிறகு நான் எதிர்மனுதாரர் மீது திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 10.08.2024ல் புகார் கொடுத்தார் என்றால் அது எனக்குதெரியாது. அந்த மனு விசாரணைக்கு நான் ஆஜரானேன் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் பொய்யாக நடிக்கிறார். DVC 8/23 வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரையும், குழந்தையும் புறக்கணித்து வேறு பெண்ணை திருமணம் செய்வதற்காக பெய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்ட பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**